ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023

SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கபிலர் பாடல்களில் கருப்பொருள் வெளிப்பாடு

*பொன்.கனகா,*
*பதிவு எண்: 21212014022010,*
*முனைவர்பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வு மையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி- 628002.*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது,*
*அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி-627012,*
*தமிழ்நாடு, இந்தியா.*

*முனைவர்.ர.செல்வலதா,*
*நெறியாளர் & உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்,*
*ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி- 628 002, தமிழ்நாடு, இந்தியா.*

*ஆய்வுச் சுருக்கம்:*

*சங்க இலக்கியத்தின் பாடு பொருளாக விளங்குபவை காதலும் வீரமும் ஆகும். அகம் சார்ந்த இலக்கியத்தை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என வகைப்படுத்தி இலக்கியம் படைத்தனர். கருப்பொருள்கள் இலக்கியத்தின் பாடுபொருளை எடுத்துரைப்பதற்கு அடிப்படையாய் அமைகின்றன. இலக்கணம் வகுத்தோர் நிலம் சார்ந்த உயிருள்ள மற்றும் உயிரற்ற பதினான்கினை கருப்பொருளாகக் குறிப்பிட்டனர். அகத்திணையை ஏழாக வகைப்படுத்தினர். அன்பின் ஐந்திணையில் முதலாவதாகக் கூறப்படுவது மலையும் மலை சார்ந்த பகுதியாகிய குறிஞ்சித் திணையாகும். குறிஞ்சித் திணைப் பாடல்கள் பாடுவதில் வல்லவராக விளங்கியவர் கபிலர். அவரது குறிஞ்சித்திணைப் பாடல்களில், தலைவன் தலைவியின் வாழ்வியல் உணர்வுகளை வெளிப்படுத்தும் சூழலில், குறிஞ்சியின் கருப்பொருள் வெளிப்படுவதை அறிய முடிகிறது.*

*முன்னுரை:*

*பண்டைய தமிழர் காதலையும் வீரத்தையும் இருகண்களாகக் கருதி வாழ்ந்தனர். புலவர்களுக்கு அகம் சார்ந்த காதலைப் புலப்படுத்துவதற்குக் கருப்பொருட்கள் துணை செய்தன. சங்க இலக்கியங்களில் குறிஞ்சித்திணை குறித்துப் பல்வேறு புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவர்களுள் குறிஞ்சி நிலத்தால் மிகுதியாக ஈர்க்கப்பட்டு அதிகமாகக் குறிஞ்சியைப் பாடிய புலவர் கபிலர் ஆவார். குறிஞ்சி நிலத்தையும், மக்களையும், ஏனைய உயிரினங்களையும், இயற்கையையும் தம்கவியில் பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தியுள்ளார். கபிலரின் பாடல்களில் குறிஞ்சித்திணையின் கருப்பொருள் வெளிப்படுகின்ற பாங்கினை ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.*

*ஆய்வு அணுகுமுறை:*

*ஒரு சமுதாயப் பின்புலத்தில் பிறக்கிற இலக்கியம், அந்தச் சமுதாயத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ புலப்படுத்தும் என்கிறது சமுதாயவியல் அணுகுமுறை. இவ்வாய்வில், கபிலரின் பாடல்கள் வெளிப்படுத்துகின்ற குறிஞ்சிநிலமக்கள் குறித்த செய்திகள் ஆராயப்படுவதால் "சமுதாயவியல் அணுகுமுறை" கையாளப்பட்டுள்ளது. கபிலர் பாடல்களில் காணப்படும் குறிஞ்சித் திணையின் பல்வேறு கருப்பொருள்களை வகைப்படுத்தி, தரவுகளின் அடிப்படையில் தொகுத்தும் பகுத்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதால், பகுப்பாய்வு*

அணுகுமுறை மற்றும் விளக்கமுறை அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகளும் கையாளப்பட்டுள்ளன.

குறிஞ்சியும் கபிலரும்:

சங்க நூல்களில் குறிஞ்சித்திணையில் மிகுதியானப் பாடல்களைப் பாடிய சிறப்புக்குரியவர் கபிலர் ஆவார். குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடிய புலவர்களில் முதன்மையானவரும் இவரேயாவார். அவருடைய பாடல்களில் குறிஞ்சி வளமும், குறிஞ்சி நிலவாழ்க்கையும் அவரின் புலமையும் வெளிப்படுகின்றன.

“மலையும் மலைப்பாங்கரும் ஆகிய சூழ்நிலையில் வைத்துக் களவொழுக்கத்தைப் புனையவல்ல பேராளர் கபிலர். களவின் பலதுறைகளும் இவரிடத்துப் பாடப்படுகின்றன. களவுத் துறைகளுள் வரைவுத் துறைகளை விரும்பிப்பாடும் இயல்பினர் என்று அறிகின்றோம். அதனாலன்றோ ஆரிய அரசன் பிரகதத்தனுக்குக் குறிஞ்சிப்பாட்டை அறத்தொடுநிற்றல் என்னும் துறையில் வைத்துக் கற்பித்தார்”[1] என்று கபிலரின் சிறந்த மதிநுட்பத்தையும் அகத்துறை ஈடுபாட்டையும் வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுகின்றார்.

“இயற்கை எழில் நயப்போருக்கு கபிலர் பாடல்கள் வற்றாச்சுரங்கம்; அவர் பாடல்களிலே கவிதைநயம் உண்டு. கனிந்த இசையும் உண்டு. கலையின் மெருகும் உண்டு. கருத்துநுட்பம் உண்டு பண்பாட்டின் உயிர் உண்டு. மேலும் கபிலர் பாடல்களில் சிறப்பாகக் கொள்ளை எழில் குலவும் குறிஞ்சியே எல்லாமாய்ப் பொழியும் மாண்பினைக் காணலாம். இதனால் குறிஞ்சிக்கு கபிலர் என்றால் அது எவ்வகையிலும் பொருந்தும்”[2] என்று மு.வரதராசரும்,

“பலர் புகழ் நல் இசைவாய்மொழிக் கபிலன்”[3] என்று நக்கீரரும்,

கபிலரைப் போற்றுகின்றனர். கபிலர் குறிஞ்சி நிலத்தை விரும்பியதனால்தான் மிகுந்த ஈடுபாட்டுடன் அங்குள்ள சூழலைக் காட்சிப்படுத்த இயன்றது என்பது புலனாகின்றது.

கருப்பொருள்:

பண்டைய தமிழ் ஆன்றோர்களும், சான்றோர்களும் தனது வாழ்வியல் கோட்பாட்டினை வகுத்த முறையினை முதன்மை இலக்கண நூலான தொல்காப்பியம் நுவலும். கருப்பொருள் என்பது அவ்வவ்திணைக்குரியனவாய் அவற்றின்சார் உள்ளவனவாகிய தெய்வம் முதல் தொழில் வரை பதினான்கு என்று சுட்டுகிறது தொல்காப்பியச் சூத்திரம்.

“தெய்வம் உணாவேமாமரம் புள்பறை
செய்தியாழின் பகுதியொடுதொகைஇ
அவ்வகைபிறவும் கருஎனமொழிப”[4] (தொல்.பொருள். 964)

குறிஞ்சித்திணையின் கருப்பொருள்:

தெய்வம் - சேய் (முருகக்கடவுள்) ; உயர்ந்தோர் -பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி ; தாழ்ந்தோர் - குறவர், கானவர், குறத்தியர் ; பறவை - கிளி,மயில் ; விலங்கு - புலி, கரடி,யானை, சிங்கம் ; ஊர் – சிறுகுடி ; நீர் - அருவிநீர், சுனைநீர் ; பூ - வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ, காந்தட் பூ ; மரம் - சந்தனம், தேக்கு, அகில், மூங்கில் ; உணவு - மலைநெல்,மூங்கிலரிசி, தினை ;பறை - தொண்டகப் பறை; யாழ் - குறிஞ்சியாழ் ; பண் - குறிஞ்சிப்பண் ; தொழில் - வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினைகாத்தல், தேன் எடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல்.

தெய்வம்:

கருப்பொருளின் முதலாவதாக அமைவது அந்நிலம் சார்ந்த தெய்வமாகும். குறிஞ்சி நிலத்தின் கடவுளான முருகன், குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலில் முதன்மை இடத்தைப் பெறுகிறார்.

“கறிவாளர் சிலம்பிற் கடவுட் பேணி
அறியாவேலன் வெறிஎனக் கூறும்” (ஐங் .243)

என்ற கபிலரின் பாடல்வரிகள், மிளகுக் கொடிவளரும் குறிஞ்சியின் மலையில் குடிகொண்டுள்ள முருகக் கடவுளை வேண்டி வழிபாடு நிகழ்த்தினால், தன் மகளுக்கு ஏற்பட்ட பிணி நீங்கும் என அன்னை வழிபாடு மேற்கொண்டதாகக் கூறுகின்றது.

*தலைவனைப் பிரிந்து துயருறும், தலைவியின் துன்பத்தைப் போக்குகின்ற வழியாக நற்றாய் இறைவழிபாட்டை மேற்கொள்கிறாள். குறிஞ்சி நிலமாதலால் குறிஞ்சிக் கடவுள் முருகன் வழிபடப்பட்டுள்ளமை அறிய முடிகிறது.*

*தமிழ்ச் சமூகத்தில் முதன்மையான பல செயல்பாடுகளில் தெய்வச்சிந்நதனைகள் மேலோங்கிய வண்ணம் இருந்து வருகிறது. "தமிழர்களுக்கு மலைமேல் வாழ்க்கை தொடங்கிய அக்காலத்திலேயே கடவுளுண்மை முகிழ்த்து விட்டது. தெய்வம் உணாவே, மாமரம் புள் எனத் தெய்வமும் திணைக் கருப்பொருளாக எண்ணப்பட்டு வருதலின் தமிழர் தெய்வங்கள் தமிழ் நிலத்தாய் ஈன்றவை என்று துணிந்து கூறலாம்"[5] என்று குறிப்பிடுகிறார் வ.சுப.மாணிக்கம்.*

*மக்கள்:*

*சமூக வாழ்வில் உயர்ந்தோர் அல்லோர் என்ற நிலைப்பாடு காலங்காலமாக இச்சமூகத்தில் நிலவி வருகின்றது. அந்த வகையில் குறிஞ்சி நிலத்திலும் மக்களின் வாழ்வியற் செயற்பாடுகளினைக் கொண்டு இந்நிலைப்பாடு காணப்படுகின்றது.*

*உயர்ந்தோர்:*

*குறிஞ்சி நிலத்தின் தலைவன் வெற்பன், பொருப்பன், சிலம்பன் என்றும், தலைவி 'கொடிச்சி' என்று அழைக்கப்பட்டுள்ளனர்.*

*"ஓங்கித் தோன்றும் உயர்வரை*
*வான் தோய் வெற்பன் வந்தமாறே" (அகம் .42)*

*என்ற அகநானூற்றுப் பாடலில், நெடுந்தொலைவில் உள்ள பக்கமலைகளை உடைய நம்தலைவனாகிய வெற்பன் என்று குறிஞ்சித் தலைவனைக் கபிலர் குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகிறது. 'வெற்பு' என்பது மலையைக் குறிக்கும் சொல்லாகும். வெற்பன் என்னும் சொல் மலைப்பகுதியான குறிஞ்சியைச் சார்ந்த தலைவன் எனும் பொருளில் அமைந்துள்ளது.*

*"கொடிச்சி கூந்தல் போலத் தோகை*
*அம் சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பன்*
*வந்தனன்; எதிர்ந்தனர் கொடையே;*
*அம் தீம் கிளவி! பொலிக, நின் சிறப்பே!" (ஐங்.300)*

*என்ற பாடலில், குறிஞ்சித் தலைவியான கொடிச்சியை, குறிஞ்சித் தலைவன் வெற்பன் வரைவு வேண்டியமையாக கபிலர் குறிப்பிட்டுள்ளார்.*

*அல்லோர்:*

*ஆண்களைக் 'குறவர்' என்று குறிப்பிட்டுள்ளனர். அச்சொல் உயர்ந்தோர் அல்லாதவரைக் குறிப்பிடுவதாக அமைந்திருந்துள்ளது.*

*"குறவர் முன்றில் மாதீண்டுதுறுகல்*
*கல்லாமந்திகடுவனோடுஉகளும்*
*குன்றநாட நின் மொழிவல்" (ஐங்.277)*

*என்ற பாடலில் குறிஞ்சி நிலமக்கள் தம் முற்றத்தில் விலங்குகள் உரசி உடல் தினவைப் போக்கிக் கொள்ள உதவுமாறு குண்டுக் கல்லைப் போட்டு வைப்பர் என்றும், தலைவியை பசலையுமாறு பரிந்துச் செல்வதற்குரிய காரணத்தைக் கூறுமாறும் தோழி தலைவனிடத்தில் வினவுகிறாள். இக்கூற்றில் குறிஞ்சி நிலமக்களைக் குறிப்பிடும் பொழுது 'குறவர்' எனக் கபிலர் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகிறது.*

*மக்கள் வழங்கக்கூடிய அனைத்துச் சொற்களும் ஏதேனும் பொருளை மையமிடுவதாகவே அமைகின்றன என்றுதொல்காப்பியர் குறிப்பிடுவார். அந்தவகையில் திணை சார்ந்த மக்களின் பெயர்களிலும் உயர்ந்த நிலையும், அதற்கு மாறான அல்லாத நிலையும் மையமிடுகின்ற தன்மையைக் காண முடிகின்றது.*

*புள்:*

*தலைவன் தலைவி மையமிட்ட வாழ்வியலை இலக்கியமாகப் பதிவிடும் பொழுது கருப்பொருட்கள் இன்றியமையாததாக விளங்குகின்றன. அந்த வகையில் அந்நிலம் சார்ந்த புள்ளினமும் தனக்கென ஓரிடத்தைப் பிடிக்கின்றது. குறிஞ்சி நிலத்தின் பறவைகளாகக் கிளி,*

*மயில் அமைகின்றன. கபிலரின் பாடல்களில் கிள்ளை என்னும் பெயர் பெறும் கிளிகள் முதன்மையான புள்ளினமாக இடம்பெறுகின்றது.*

*"வெள்ளவரம்பின் ஊழி போகியும்*
*கிள்ளைவாழியபலவே - ஒள் இழை*
*இரும்பல் கூந்தற் கொடிச்சி" (ஐங்.281)*

*என்ற பாடலில் கபிலர், கிளிகளைப் பல்லாண்டு வாழ வேண்டும் எனத் தலைவன் வாழ்த்துவதாகப் பாடியுள்ளார். தன் தலைவியாகிய கொடிச்சியை தினைப்புனக் காவலுக்கு வரச் செய்தவை அவைகள். எனவே பல ஊழிக்காலம் கடந்தும் அக்கிளிகள் வாழ்க எனத் தலைவன் வாழ்த்துகிறான். இதன்மூலம் கிள்ளை, தலைவன் தலைவி களவு ஒழுக்கத்தில் பெற்றிருந்த முக்கிய இடத்தை கபிலர் வெளிப்படுத்தியிருப்பதை அறிய முடிகிறது.*

*விலங்கு:*

*உலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. விலங்கின் இனங்களைத் தீர்மானிப்பவை அந்தந்த இடம் சார்ந்த சூழல்களே ஆகும். குறிஞ்சி நிலத்திற்குரிய விலங்குகளாக புலி, கரடி, யானை, சிங்கம் ஆகியவை அமைகின்றன. தலைவியின் அகவாழ்வினைப் பதிவு செய்திடும் வேளையில் கருப்பொருள் நேரடியாகவோ உவமையாகவோ இடம் பெறுகின்றன. அந்தவகையில் குறிஞ்சியின் விலங்கான யானை உவமையாக அமைகின்றது.*

*"புனக்கிளிகடியும் பூங்கட் பேதை*
*தான் அறிந்தனளோ இலளோபானாள்*
*பள்ளியானையின் உயிர்த்துஎன்*
*உள்ளம் பின்னும் தன் உழையதுவே" (குறுந்.142)*

*என்ற பாடலில் தலைவியுடன் கூடிப்பிரிந்த பின், நள்ளிருள் சாமத்தில் படுத்திருக்கும் யானை பெருமூச்சுவிட்டது போல தானும் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருப்பதாகத் தலைவன் குறிப்பிடுகிறான். குறிஞ்சியின் விலங்கான யானையை, இங்கு தலைவனின் பெருமூச்சிற்கு உவமையாகக் குறிப்பிட்டுள்ளார் கபிலர். மேற்கண்ட சூழலில் தலைவனின் எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற பாங்கில் கருப்பொருளையும் வெளிப்படுத்தியுள்ளமை உணர முடிகிறது.*

*ஊர்:*

*நாடோடிகளாக வாழ்ந்த ஆதி மனித இனம், தன் சிந்தனைத் திறத்தின் படிநிலை வளர்ச்சியால் ஓரிடத்தில் தங்கி, தனக்கான குடியிருப்புகளை அமைத்துக்கொண்டது. அவ்வாறாக அமைந்த ஒவ்வொரு பகுதிகளையும் ஒவ்வொரு பெயரிட்டு அழைத்துக் கொண்டனர். பொதுப்பெயராக அதனை 'ஊர்' என்று அழைத்தனர். ஒவ்வொரு திணைகளுக்கும் வெவ்வேறு பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அந்தவகையில் குறிஞ்சி நிலத்திற்கு 'சிறுகுடி' என்று பெயரிட்டு அழைத்தனர்.*

*"கல்முகைத் ததும்பும் பல்மலர்ச்சாரற்*
*சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்*
*நீர் ஓரன்னசாயல்*
*தீஓரன்னஎன் உரன் அவித்தன்றே" (குறுந்.95)*

*என்ற பாடலில், தலைவியின் ஊரான குறிஞ்சி நிலத்தினைக் குறிப்பிடும் பொழுது 'சிறுகுடி' என்று கபிலர் பதிவு செய்துள்ளதை அறியமுடிகிறது.*

*நீர்நிலை:*

*உயிரினங்களின் வாழ்விற்கு நீர் ஆதாரமாகும். நீர் இல்லாவிடில் எவ்வித செயல்பாடுகளும் நடைபெறாது. திணை சார்ந்த மக்கள் தத்தம் திணைகளில் இருக்கும் நீர் நிலைக்கு ஏற்ப அவற்றிற்கு பெயரிட்டு அழைத்துக் கொண்டனர். குறிஞ்சித்திணை சார்ந்த மக்களின் நீர்நிலைகளாக அமைவன அருவிநீர் மற்றும் சுனை நீர் ஆகும்.*

*"மணிநிறம் கொண்டமாமலைவெற்பில்*
*துணிநீர் அருவிநம்மோடுஆடல்*
*எளியமன்னால் அவர்க்கு இனி*
*அரியஆகுதல் மருண்டனென் யானே" (ஐங்.224)*

என்ற பாடல் தலைவி கூற்றாய் அமைகிறது. மேற்கண்ட பாடலில் குறிஞ்சி நிலத்தின் நீர் நிலையாகிய அருவி, தலைவன் குறித்த நினைவை தலைவிக்கு ஏற்படுத்துவதாக கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

பூ:

மலர்ப்பண்பாடு தமிழ்ச் சமூகத்தில் காலங்காலமாக இருந்து வரும் நடைமுறையாகும். இறைவனுக்கான வழிபாட்டில் பூவும் புகையும் இட்டு வழிபடும் வழக்கம் தொடர்ச்சியாகக் காணப்பட்டு வருகின்றது. அத்தனை சிறப்புத் தன்மை பெற்றதாக மலர்கள் கருதப்படுகின்றன. குறிஞ்சி நிலத்திற்குரிய மலர்களாக வேங்கை, குறிஞ்சி, காந்தள் முதலிய மலர்கள் அமைகின்றன.

"ஒண் செங்காந்தள் ஆம்பல்இ அனிச்சம்
வான் கண் கழீஇயஅகல் அறைக் குவைஇ" (குறி. பா.91-98)

என்று குறிஞ்சி நிலத்தின் மலர்களைப் பட்டியலிடுகிறார் கபிலர்.

"கன்று ஆற்றுப்படுத்த புன்தலைச் சிறாஅர்
மன்றவேங்கைமலர்பதம் நோக்கி" (குறுந் .241)

என்ற பாடலில், தலைவியின் துயரத்தைத் தோழியிடம் கூறும் வேளையில் அச்சூழலை விளக்கும் நிலையில் கருப்பொருளான வேங்கை மலர் குறிப்பிடப்பிட்டுள்ளதைக் காண முடிகிறது. குறிஞ்சிநிலத்தில் வேங்கைமலர் குறிப்பிடத்தக்க நிலையினைப் பெற்றிருப்பது புலனாகின்றது.

"வேங்கை என்னும் சொல் வேங்கை மரத்தினையும் குறிக்கும் புலியினையும் குறிக்கும். சொல்லளவில் மட்டும் அன்றி வேங்கைமரம் பூத்துக் குலுங்கும் நிலையிலும் புலிபோலத் தோன்றுதல் உண்டு."[6] என்று குறிப்பிடுகிறார் மு.வரதராசனார்.

மரம்:

பழந்தமிழ்ச்சமூகம் இயற்கை சார்ந்த வாழ்க்கையினை வாழ்ந்தது. தாவரங்களைத் தங்களின் உறவாகக் கருதி வாழ்ந்தனர். குறிஞ்சித் திணையின் மரங்களாக சந்தனம், அகில், அசோகு, மூங்கில் போன்றவை இடம் பெறுகின்றன. மணமிக்க மரமான அகில் மரம் மலைப்பகுதிகளில் சிறப்பு பெறுகிறது.

"சாத்தமரத்த பூழில் எழுபுகை
கூட்டு விரை கமழும் நாடன்
அறவற்கு எவனோ நாம் அகல்வு? அன்னாய்" (ஐங்.212)

என்ற பாடலில், தலைவனின் உயர்வினைக் குறிப்பிடும்போது நறுமணம் மிக்க மரங்களாக சந்தனம் மற்றும் அகில் பற்றி கபிலர் குறிப்பிடுகிறார். இப்பாடலில் கருப்பொருளான மரங்கள் திணை வெளிப்பாட்டை விளக்கி அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

உணவு:

உணவு தேடுதல், தன் இனத்தைப் பெருக்குதல் என ஒவ்வொரு உயிரினங்களும் முதன்மையான இரண்டு பணிகளை மேற்கொள்கின்றன. உணவைத் தீர்மானிப்பது அந்தந்த இடம் சார்ந்த இயற்கை அமைப்பாகும். மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தின் உணவாகத் தேனும் தினையும் பழமும் கிழங்கும் மலைநெல்லும் மூங்கிலரிசியும் அமைகின்றன. குறிஞ்சி நிலத்தின் தினையுணவு அந்நிலம் சார்ந்த மக்கள் மட்டுமின்றி ஏனைய உயிரினங்களுக்கும் உணவாகப் பயன்பட்டிருக்கின்றன.

"தா அய் இழந்ததழுவரிக் குருளையொடு
வளமலைச் சிறுதினைஉணீஇ கானவர்
வரைஓங்குஉயர்சிமைக் கேழல் உறங்கும்" (ஐங்.268)

என்ற பாடலில், சிறுதினையின் கதிர்களை உண்டு வாழும் கானவர் என கபிலர் குறிப்பிட்டுள்ளார். மலைப்பகுதிக்குரிய உணவுப்பயிராக தினைகள் இருந்துள்ளது இதன்வழிப் புலப்படுகின்றது.

பறை:

முரசு, முழவு, பறை, துடி முதலியன அக்காலத்தில் இருந்த தோற்கருவியாகும். ஒரு செய்தியை அனைவருக்கும் தெரிவிக்க பறையடித்துக் கூறும் வழக்கம் சிற்றூர்களில் இன்றும் உள்ளது. இப்பழக்கம் பண்டைத்தமிழர்களிடம் இருந்ததைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன.

*இப்பழக்கத்தைக் குறிஞ்சி நிலமக்களும் கடைப்பிடித்ததைக் கபிலர்தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.*

*"தேம் கமழ் இரைவேங்கை சூடி*
*தொண்டகப் பறைசீர் பெண்டிரொடுவிரைஇ*
*மறுகில் தூங்கும் சிறுகுடிப் பாக்கத்து" (அகம்.118)*

*என்ற பாடலில் குறிஞ்சி நிலமக்கள் தொண்டகப் பறை அடித்தச் செய்தியைக் கபிலர் பதிவு செய்துள்ளார். இதன்வழி இசையின் மீது இருந்த ஈடுபாட்டையும் மரபு வழியாகத் தொண்டகப்பறையைக் குறிஞ்சி நிலமக்கள் பயன்படுத்தியதையும் அறியமுடிகிறது.*

*யாழ்:*

*ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் இசைக்கலையில் நன்கு தேர்ச்சி பெற்று விளங்கினர்.*

*"வரைஇழிஅருவிப் பாட்டொடுபிரசம்*
*முழவுசேர் நரம்பின் இம்மென இமிரும்" (அகம். 318)*

*என்ற பாடலில் மலையில் இருந்து அருவி விழுகின்ற ஓசையுடன் வண்டினங்கள் இணைந்து ஒலிப்பது யாழ் நரம்பின் இசைபோல இம்மென்று ஒலிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிஞ்சி மக்கள் யாழிசையில் தேர்ந்து விளங்கியிருந்ததை கபிலரின் இவ்வரிகள் வழி உணரமுடிகிறது.*

*குறிஞ்சிப்பண்:*

*நட்டராகம் நிரம்பிய பாலை யாழினை இயக்கவல்லவன் தன் கையால் இசைத்த செய்தி குறிஞ்சிப்பாட்டில் குறிப்பிடப்படுகிறது. நைவளம் எனப்படும் நட்டராகம் குறிஞ்சிப் பண்ணில் பாடப்படும் ஒருவகையாகும்.*

*"நைவளம் படுநிலபாலை இல்லோன்*
*கைகவர் நரம்பின் இம்மென இளிரும்" (குறி.பா.146-147)*

*மேற்கண்ட குறிஞ்சிப்பாட்டு வரிகளில் குறிஞ்சி நிலத்திற்குரிய தனிப்பண் கபிலரால் குறிப்பிடப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.*

*தொழில்:*

*மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தில், இடத்திற்கேற்பவும் மக்களின் எண்ணங்களுக்கு ஏற்பவும் தொழில் நிலைகள் அமைகின்றன. வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினைகாத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், அருவிநீராடல், சுனை நீராடல் போன்றவை குறிஞ்சிநிலம் சார்ந்த தொழில்களாக அமைகின்றன. தினையைக் காப்பதற்காகக் குறிஞ்சி நிலமக்கள் பரண் அமைத்துப் பறவைகளை விரட்டிய செய்தியை கபிலர் தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.*

*"ஏனல் அம் சிறுதினைகாக்கும் சேணோன்*
*ஞெகிழியின் பெயர்ந்தநெடுநல் யானை*
*மீன்படுசுடர் ஒளிவெரூஉம்*
*வான் தோய் வெற்பன் மணவாஊங்கே" (குறுந். 357 : 5-8)*

*என்ற பாடல் தினைப்புனத்தில் உள்ள தினையைக் காக்க பரண்மேல் இருக்கும் குறவன் கொள்ளிக் கட்டையைக் கொள்ளுதியதைக் குறிப்பிடுகிறது. தினையைக் காப்பதற்கு வேண்டிய பல்வேறு செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். தினைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் இதன்வழி உணர முடிகிறது.*

*முடிவுரை:*

*கபிலர் தம் பாடல்களில், தலைவன் தலைவியின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற போக்கில், குறிஞ்சித் திணைக் கருப்பொருள்களை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். அவரது ஒவ்வொரு பாடலிலும் கருப்பொருள்களால் குறிஞ்சித் திணை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அக உணர்வுகளை வெளிப்படுத்த கருப்பொருட்களே அடிப்படையாய் அமைகின்றன. இயற்கையின்றி மனிதன் வாழ இயலாது என்பதைப் போல, எந்தவொரு புலவராலும் இயற்கையாய் விளங்கும் கருப்பொருட்கள் இன்றி வாழ்க்கையை விளக்கிவிட இயலாது. கபிலரின் பாடல்களிலும் கருப்பொருள்கள், திணை சார்ந்த வெளிப்பாட்டை வெளிப்படுத்துபவையாக அமைகின்றன.*

*மேற்கோள்கள்:*

*1].தமிழ்க்காதல், வ.சுப. மாணிக்கம், இரண்டாம் பதிப்பு – 2005, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 01.*

*2].பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, மு. வரதாராசன், மறுபதிப்பு – 2011,பாரிநிலையம், 90,பிராட்வே, சென்னை - 600 108.*

*3].தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணார் (உ.ஆ), முதற்பதிப்பு 1952, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிராட்வே, சென்னை-02*

*4].குறிஞ்சிப்பாட்டு முல்லைப்பாட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், மூன்றாம்பதிப்பு-2012, ராயபேட்டை,சென்னை-14.*

*5].அகநானூறு மூலமும் உரையும், ந.மு.வேங்கசாமி நாட்டார், சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு -2o19, ராயபேட்டை,சென்னை-14.*

*6].குறுந்தொகை மூலமும் எளிய உரையும், முனைவர்.ரா.பிரபாகரன், பதிப்பு ஆண்டு-2017 , காவ்யா பதிப்பகம், 14, டிரஸ்ட்புரம், சென்னை-24.*

*7].ஐங்குறுநூறு மூலமும் உரையும், தி.சதாசிவம் ஐயர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பதிப்பு ஆண்டு-1999, தரமணி, சென்னை-6oo113.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********